# அவசர கூட்டப்பொருட்கள்

**1.** இந்நகராட்சிக்கு மூன்றாவது குடிநீர் அபிவிருத்தி திட்டம் AMRUT திட்டத்தின் கீழ் செயல்படுத்தவும், மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் மானியம் போக மீதம் உள்ள தொகை TNUDF மூலம் கடன் பெற்று கீழ்கண்டவாறு திட்டம் செயல்படுத்த கடன் வழங்கப்பட்டுள்ளது.

| SL No. | Means of Finance | Amount / Rs. in crores | Percentage |
|---|---|---|---|
| 1. | Loan from TNUDF Under World Back assisted TNSUDP | 52.46 | 22.61% |
| 2. | Grant from Government of India Under AMRUT (SAAP-1) | 111.72 | 48.14% |
| 3. | Grant from Government of Tamil Nadu Under AMRUT (SAAP-1) | 44.68 | 19.25% |
| 4. | ULB Contribution | 23.21 | 10.00% |
| 5. | Total Project cost | 232.07 | 100.00% |
| 6. | O&M Cost for five years | 19.36 | - |
| 7. | Project cost including O&M Cost for 5 years | 251.43 | - |

மேற்கண்டவாறு நிதி பெற்று Agreement and Tripartite Agreement –ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும், மேற்படி பண பரிமாற்றங்கள் ESCROW கணக்கு Indian Bank, Nagercoil –ல் கிளையில் துவங்கப்பட்டுள்ளதில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.22185/2015/இ3

**தீர்மானம் எண். 807 – அங்கீகரிக்கப்பட்டது.**

2. இந்நகராட்சியின் வழக்கறிஞராக (Standing Counsel) திரு.S.நாகராஜன் வழக்கறிஞர் **15.12.2014** முதல் **3** ஆண்டுகளுக்கு நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்யப்பட்டு நகராட்சிக்கான வழக்குகளை நாகர்கோவில் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை நடத்தி வந்துள்ளார். அன்னாரின் பதவிக்காலம் **15.12.2017–ல்** முடிவு பெறுவதால் புதிதாக நகராட்சி வழக்கறிஞர் நியமனம் செய்யப்படவேண்டும்.

இந்நிலையில் திரு.M.S.மூர்த்தி வழக்கறிஞர் தன்னை நகராட்சி வழக்கறிஞராக நியமனம் செய்ய கேட்டு விண்ணப்பம் அளித்துள்ளார்.

நகராட்சிக்கு சொந்தமான புளியடி பகுதியில் உள்ள இடத்தில் எரிவாயு தகன மேடை அமைப்பதை எதிர்த்து O.S,.No. 277/2013 மற்றும் I.A No: 362/2013 வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நகராட்சிக்கு எதிராக தடை உத்தரவு பெறப்பட்டது. மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு.M.S.மூர்த்தி வழக்கறிஞர் ஆஜராகி நகராட்சிக்கு சாதகமான தீர்ப்பை பெற்று தந்துள்ளார்.

மேலும், நகராட்சிக்குட்பட்ட வடசேரி பேருந்து நிலைய அணுகு சாலை நுழைவு பகுதியில் புல எண்.E11/2-3-ல் நகரமனை சம்பந்தமான இடத்தை திருமதி. லீலா வாசுதேவன் என்பவரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருந்த நிலையில் ஆக்கிரமிப்பு அகற்றுவது சம்பந்தமான வழக்கு O.S,.No. 140/2000 மற்றும் .E.P. No: 277/2005 –ன் படி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை கட்சி சேர்த்து வழக்கு நடைபெற்று வந்தது. இந்நிலையில் சார் ஆட்சியர் அவர்கள் நகராட்சி ஆணையாளர் அவர்களையும் கட்சி சேர்க்க நேரடியாக அறிவுறுத்தியதின்படி நகராட்சி ஆணையாளர் அவர்களையும் மேற்படி வழக்கில் கட்சி சேர்த்து நடைபெற்று வரும் வழக்கிலும் திரு.M.S.மூர்த்தி வழக்கறிஞர் நகராட்சி சார்பில் ஆஜராகி வழக்கை நடத்தி வருகிறார்.

எனவே எரிவாயு தகனமேடை வழக்கில் நகராட்சிக்கு சாதகமான தீர்ப்பு பெற்று தந்தபடியாலும் மூத்த வழக்கறிஞர் மற்றும் நகராட்சி சம்பந்தமான அனைத்து பிரிவுகளையும் பற்றி நல்ல தெரிந்த அனுபவம் வாய்ந்தவர் என்பதாலும் திரு.M.S.மூர்த்தி வழக்கறிஞர் அவர்களை நகராட்சி வழக்கறிஞராக (Standing Counsel) **16.12.2017** முதல் மூன்றாண்டுகளுக்கு நியமனம் செய்ய அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.**1839/2006**/எப்2

**தீர்மானம் எண். 808 – அங்கீகரிக்கப்பட்டது.**

3. இந்நகராட்சியில் உள்ள 52 வார்டுகளில் வார்டு மறு நிர்ணயம் செய்ய வரப்பெற்ற தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள்.12.09.2017 மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில மறு சீரமைப்பு ஆணையம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்3174/2017/இஜி1 நாள்.19.10.2017 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

கோப்பு எண்.13030/2017/அ1

**தீர்மானம் எண். 809 – அங்கீகரிக்கப்பட்டது.**

4. இந்நகராட்சியில் உள்ள 52 வார்டுகளில் வார்டு மறு நிர்ணயம் செய்ய வரப்பெற்ற தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள்.12.09.2017 மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில மறு சீரமைப்பு ஆணையம் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்3174/2017/இஜி1 நாள்.19.10.2017 –ன் படி தயார் செய்யப்பட்டுள்ள வார்டு மறு சீரமைப்பிற்கான பிரேரணை மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

கோப்பு எண்.13030/2017/அ1

**தீர்மானம் எண். 810 – அங்கீகரிக்கப்பட்டது.**

5. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி ஆம்னி பேருந்து நிலையத்தில் மேற்கு பக்கத்தில் பயணிகள் நிழற்கூடை (Waiting Shed) அருகில் 150 ச.அடி கொண்ட டிக்கட் முன்பதிவு அறை எண் 25–க்கு உரிமம் அனுபவிக்க 06–11–2017 அன்றைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள யாரும் முன் வரவில்லை, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி<br>திரு / திருமதி | ஒப்பந்தப்புள்ளி<br>விபரம் |
|---|---|---|
| 01 | C. இராமநாதன் பிள்ளை<br>த/பெ R. சந்திரன்<br>4/327, பாறையடி ரோடு<br>புத்தேரி, நாகர்கோவில் | 22,000/– |
| 02 | P. ஆறுமுகம் பிள்ளை<br>3/110F தெற்கு புத்தேரி<br>புத்தேரி (ஊ)<br>புத்தேரி | 30000./ |

மேற்காணும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் 150 ச.அடி கொண்ட டிக்கட் முன்பதிவு அறை எண் 25–க்கு உயர்ந்த வாடகை தொகை கோரிய திரு. ஆறுமுகம் பிள்ளை என்பவருக்கு உரிமம் வழங்கிட மன்ற அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்.5350/2008/அ13

**தீர்மானம் எண். 811 – அங்கீகரிக்கப்பட்டது.**

6. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தில் Phase II–ல் கடை எண் 13–க்கு உரிமம் அனுபவிக்க 29–11–2017 அன்றைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள யாரும் முன் வரவில்லை, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி<br>திரு / திருமதி | ஒப்பந்தப்புள்ளி<br>விபரம் |
|---|---|---|
| 01 | D. சுரேஷ்<br>44, வணிகர் தெரு<br>வடசேரி, நாகர்கோவில் | 12,000/– |

மேற்காணும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் வடசேரி பேருந்து நிலையத்தில் Phase II–ல் கடை எண் 13–க்கு உயர்ந்த வாடகை தொகையாக திரு. D. சுரேஷ் என்பவர் கோரியுள்ளார்.

மேமற்படி கடைக்கு பலமுறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மாத வாடகையாக ரூ 8000/– ரூ 10100/– ரூ 10400/– ரூ 11000/– என வரப்பெற்றது. தற்போது உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 12000/– வரப்பெற்றுள்ளது.

மேற்படி கடை பல மாதங்களாக பூட்டி இருப்பதினால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது, எனவே வடசேரி பேருந்து நிலையத்தில் Phase II–ல் கடை எண் 13–க்கு கூடுதல் ஒப்பந்தப்புள்ளி ரூ 12000/– என கோரிய திரு, D. சுரேஷ் என்பவருக்கு கடை உரிமம் வழங்கிட மன்ற அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.020346/2016/அ13

**தீர்மானம் எண். 812 – அங்கீகரிக்கப்பட்டது.**

7. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி பேருந்து நிலையத்தில் Phase I–ல் கடை எண் 03–க்கு உரிமம் அனுபவிக்க 29–11–2017 அன்றைக்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் கலந்துக்கொள்ள யாரும் முன் வரவில்லை, ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி<br>திரு / திருமதி | ஒப்பந்தப்புள்ளி<br>விபரம் |
|---|---|---|
| 01 | A.J. JAHAFAR SADIQ<br>S/o M. Abdul Jabbar<br>78/84 Pattariyar Long street<br>Edalakudy, Nagercoil | 10,000/– |

மேற்காணும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் வடசேரி பேருந்து நிலையத்தில் Phase I–ல் கடை எண் 03–க்கு உயர்ந்த வாடகை தொகையாக திரு. A.J. ஜஹபர் சாதிக் என்பவர் கோரியுள்ளார்.

மேற்படி கடைக்கு பலமுறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மாத வாடகையாக ரூ 7000/–. என ஒரு முறை வரப்பெற்றது. தற்போது உயர்ந்தபட்ச மாத வாடகையாக ரூ 10000/– வரப்பெற்றுள்ளது.

மேற்படி கடை பல மாதங்களாக பூட்டி இருப்பதினால் நகராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டு வருகிறது, எனவே வடசேரி பேருந்து நிலையத்தில் Phase I–ல் கடை எண் 03–க்கு கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. A.J. ஜஹபர் சாதிக் என்பவருக்கு கடை உரிமம் வழங்கிட மன்ற அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண்.019358/2016/அ13

**தீர்மானம் எண். 813 – அங்கீகரிக்கப்பட்டது.**

8. இந்நகராட்சிக்கு சொந்தமான வடசேரி காந்திஜி நினைவு மருத்துவமனை முன்பக்கம் கட்டப்பட்டுள்ள கடைகளின் மேல் தளத்தில் உள்ள தலா 178 ச.அடி கொண்ட கடை எண்கள் 7, 8 மற்றும் 9-க்கான உரிமம் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரிடவும், அதற்கான விளம்பர செலவினத்திற்கும் மன்ற அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 015379/2017/அ13

**தீர்மானம் எண். 814 – அங்கீகரிக்கப்பட்டது.**

9. இந்நகராட்சிக்கு சொந்தமான வடிவீஸ்வரம் தாய் சேய் நல விடுதி அருகில் தரை தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடை எண் 2, 3 மற்றும் 4 –க்கான பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 29–11–2017–ல் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

| வ.எண் | பெயர் மற்றும் முகவரி<br>திரு / திருமதி | பொது ஏலம் விபரம் | ஒப்பந்தப்புள்ளி<br>விபரம் |
|---|---|---|---|
| **கடை எண் – 02** | | | |

| | | | |
|---|---|---|---|
| 01 | N. குமார்<br>86, தளவாய் தெரு<br>வடிவீஸ்வரம்<br>நாகர்கோவில் | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | 4,000/- |
| 02 | N. சுடலையாண்டி<br>த/பெ நீலகண்டன்<br>17.76 A மாரியம்மன் கோயில் தெரு<br>ஆரல்வாய்மொழி | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | 2,500/-<br>– |
| **கடை எண் – 03** | | | |
| 01 | R.M. ஷர்மி<br>க/பெ சாகுல் ஹமீது<br>168 ஒட்டுபுரை தெரு<br>கூடசேரி<br>நாகர்கோவில் | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | 3,200/- |
| 02 | N. பகவதி பெருமாள்<br>த/பெ நீலகண்டன்<br>17.76 A மாரியம்மன் கோயில் தெரு<br>ஆரல்வாய்மொழி | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | 2, 304/- |
| 03 | மாரியப்பன்<br>த/பெ சண்முகம்<br>வாகையடி மேல ரத வீதி<br>கோட்டார் | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | 3,900/- |
| **கடை எண் – 04** | | | |
| 01 | E. கிருஷ்ணவேணி<br>த/பெ ஈஸ்வர பிள்ளை<br>42/21 நடராஜபுரம்<br>வடிவீஸ்வரம், நாகர்கோவில் | பொது ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை | 2,403/- |

மேற்காணும் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையில் கடை எண் 02– க்கு உயர்ந்தபட்ச வாடகையாக:ரூ 4000/–, திரு. குமார் என்பவர் கேட்டுள்ளார்.

கடை எண் 03–க்கு உயர்ந்தபட்ச வாடகையாக ரு 3900/–, திரு. மாரியப்பன் என்பவர் கேட்டுள்ளார்.

கடை எண் 04–க்கு குறைந்தபட்ச வாடகையாக ரு 2403/–, வரப்பெற்றுள்ளதால் கடை எண் 04–க்கு மறு ஏலம் கோரிடவும் மன்ற அங்கீகாரத்திற்கு.

கடை எண் 2 மற்றும் 3–க்கு உயர்ந்த வாடகை தொகை கோரியவர்களுக்கு கடை உரிமம் வழங்கிடவுடம் மன்ற அங்கீகாரத்திற்கு.

கோப்பு எண். 582/2011/அ13

**தீர்மானம் எண். 815 – அங்கீகரிக்கப்பட்டது.**

10. இந்நகராட்சியின் துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் அண்ணா பேருந்து நிலையத்தில் இயங்கி வந்ததை பொது மக்கள் நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் முறைகேடாக கடையாக ஒதுக்கீடு செய்து உள்ளதை ரத்து செய்து மீண்டும் பொதுமக்கள் நலன் கருதி துப்புரவு ஆய்வர் அலுவலகம் அதே இடத்தில் அமைத்து தர வேண்டும் என திரு.T.முருகப்பன் என்பவர் அளித்த புகார் மனு அளித்துள்ளார். அப்புகார் மனு மீது 13.12.2017–ல் இந்நகராட்சி அலுவலகத்தில் புகார்தாரர், அண்ணா பேருந்து நிலைய கடை எண்.9ன் குத்தகைதாரர் திரு. அஜீ செல்வம், வருவாய் அலுவலர் திரு.குமார்சிங், துப்புரவு ஆய்வர் திரு. மாதேவன் பிள்ளை, வருவாய் ஆய்வர் திரு.எஸ்.முருகன் மற்றும் பிரிவு எழுத்தர் திரு. ஷாகுல் ஹமீது ஆகியோரிடம் ஆணையர் அவர்களால் விசாரணை நடத்தப்பட்டது.

விசாரணை விபரத்தை கூர்நோக்கு செய்ததில் பின் வரும் விபரஙகள் கண்டறிப்பட்டது.

1. நகர்மன்ற உறுப்பினர் திரு.சேகர் என்பவரின் இரத்த உறவினரின் பெயரில் கடை ஒதுக்கப்பட்டுள்ளது.
2. கடை குத்தகை எடுத்த திரு. அஜீ செல்வம் என்பவர் கடையை நடத்தவில்லை. விசாரணையில் அவர் ஓமன் நாட்டு தலைநகர் மஸ்கட்டில் பணிபுரிந்து வருவதாக தெரிவித்துள்ளார். திரு.கோபால் என்பவருக்கு உள்வாடகைக்கு விட்டதும் கண்டறியப்பட்டது.
3. குத்தகை உரிமைக்காலம் 31.03.2017–ல் முடிவடைந்து விட்டது. குத்தகை உரிமம் புதுப்பித்தல் கட்டணத்துடன் விண்ணப்பம் குத்தகைதாரரால் அளிக்கப்படாததால் குத்தகை உரிமம் தன்னியல்பாகவே காலாவதியாகி விட்டது.
4. பொதுமக்களுக்கு மிகவும் பயனளிக்கும் வகையில் இயங்கி வந்த துப்புரவு ஆய்வாளரின் அலுவலகத்தை காலி செய்து நகர்மன்ற உறுப்பினரின் இரத்த உறவான (அண்ணன் மகன்) திரு.அஜீ செல்வம் என்பவருக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக7–வது கோட்ட துப்புரவு ஆய்வாளர் அலுவகத்தில் 15–வது கோட்ட துப்புரவு ஆய்வாளர் அலுவலகம் செயல்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

மேலே கண்டுள்ள காரணங்களின் அடிப்படையிலும் நகராட்சி ஆணையாளர் அவர்களின் அறிக்கையின்படியிலும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அங்கு துப்புரவு ஆய்வாளர் கோட்ட அலுவலகம் செயல்பட வேண்டும் என்ற நோக்கத்திலும் குத்தகை விதிகளை மீறி தற்போது திரு. கோபால் என்பவருக்கு உள்குத்தகை விடப்பட்டுள்ளதின் காரணமாகவும் மேற்கண்ட அண்ணா பேருந்து நிலைய கடை எண்.9,வரிவிதிப்பு எண்.2014418 –ன் குத்தகை உரிமம் ரத்து செய்திட அங்கீகாரத்திற்கு

கோப்பு எண்.5350/2008/அ13

**தீர்மானம் எண். 816 – அங்கீகரிக்கப்பட்டது.**